# 1 யூத சமூக நோக்கு

இறை அழைப்பின் மூலம் ஆபிரகாமின் தலைமைத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இஸ்ரயேல் இனம் பின்னர் பத்துக்கட்டளைகளின் அடிப்படையில் ஒரு சமூகமாக செயற்பட்ட விதம் தொடர்பான கற்றல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொடக்க நூல் 12:2-3, 13:14-17, 15:5, விடுதலைப்பயணம் 20:1-17**

## ஆபிரகாமின் அழைப்பு

கி.மு. 19 ம் நூற்றாண்டில் பாபிலோனியாவிலிருந்து செழிப்பு நிறைந்த கானான் தேசம் நோக்கி மக்கள் குழுவினர் கூட்டம் கூட்டமாக இடம்பெயர்ந்தனர். ஆனாலும் ஆபிரகாமின் (ஆபிராம்) குழுவினரின் இடப்பெயர்வு உலக தேவை காரணமாக அன்றி, இறைவனின் உறுதியான நோக்கத்தை நிறைவேற்றுமுகமாக இடம்பெற்றது. ஆரான் தேசத்தில் ஆபிரகாமையும் அவனது குடும்பத்தையும் ஆண்டவர் அழைத்தார். அதன் விளைவாக அவனது தாய்நாடு, தந்தையின் வீடு, உறவினர், உடைமைகள் அனைத்தையும் விட்டு ஆபிரகாம் பயணத்தை ஆரம்பித்தார். நாம் இறைவனுக்கு பணிந்து செயற்படும்போது எமக்கு உரித்தான சில வளங்களை தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

## ஆபிரகாமின் நம்பிக்கை

ஆபிரகாம் இறை அழைப்புக்கு காட்டிய மாறுத்தரம் அவருக்குள் ஒரே கடவுள் குறித்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. அவருக்குரிய அனைத்தையும் விட்டு விலகி, இறைவனை மட்டும் வழிபட்டு வாழ வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டார். இதிலிருந்து வெளிப்படும் இரு கருத்துக்கள் :

1. யூத சமூகமானது ஒரே கடவுள் கொள்கையில் கட்டியெழுப்பப்பட்ட சமூகம்
2. அதே போன்று அந்த சமூகத்தின் ஆரம்ப வரலாறு, ஆபிரகாமின் இறையழைப்போடு தொடர்புபட்டுக் காணப்படுகிறது

## ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை

இறைவன் ஆபிரகாமுடன் ஆழமான உறவை ஏற்படுத்தினார். அவரது அழைப்பின் அடுத்த படிமுறை இறைவன் ஆபிரகாமுடன் ஏற்படுத்திய உடன்படிக் கையாகும். இந்த உடன்படிக்கையில் ஆபிரகாமும் அவரது வழிமரபினரும் இறை நம்பிக்கையுடனும் கீழ்ப்படிவுடனும் வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இறைவனுக்கும் அவரது வழிமரபினருக்கும் இறையாசி வழங்கும் உடன்படிக்கையாக இது அமைந்தது. இந்த இறை ஆசியில் மூன்று உறுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### (I) பெரிய இனத்தின் தந்தையாக நியமிக்கப்படல் (தொடக்க நூல் 12:2, 13:16, 15:5)

ஆபிரகாம் தொண்ணூற்று ஒன்பது வயதாகியும் பிள்ளை இல்லாமல் இருந்தார். இறைவன் அவரிடம் 'பூவுலகின் மண்ணைப் போலவும்', 'விண்மீன்கள்' போன்றும் எண்ணமுடியாத அளவு வழிமரபினரை வழங்குவதாக ஆபிரகாமுக்கு வாக்கு அளித்தார். உன் பெயர் ஆபிராம் அன்று; 'ஆபிரகாம்' என்று அழைக்கப்படும் என்று கூறினார். இதன் பொருளானது 'இனத்தின் தந்தை' என்பதாகும்.

### (II) நாட்டின் உரிமை பெறல் (தொடக்க நூல் 12:7, 13:15, 17:8)

ஆபிரகாம் ஆரான் நாட்டில் தனக்கு உரித்தான தந்தையின் உடைமைகளை விட்டு இறைவனது அழைப்புக்கு பணிந்து நடந்தார். செழிப்பான நாட்டின் உரிமையை வழங்குவதாக இறைவன் அவருக்கு வாக்களித்தார்.

### (III) பிறருக்கு ஆசியாக வாழ்தல் (தொடக்க நூல் 12:1-3)

ஆபிரகாமுக்கும் அவரது வழிமரபினருக்கும் ஆண்டவரின் ஆசி கிடைத்தது. ஆனாலும் இறை நோக்கம் இதனைக் கடந்ததாக இருந்தது. இறைவன் ஆபிரகாமுக்கு அளித்த மூன்றாவது உடன்படிக்கை 'உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசி பெறுவாய். உன் வழியாக மக்கள் இனங்கள் அனைத்தும் ஆசி பெறும்' என்பதாகும். ஆபிரகாமின் நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிவால் ஆசி தனிப்பட்ட வகையில் மட்டுமல்ல உலக வாழ் மக்கள் அனைவருக்கும் கிடைத்த அதி விசேட ஆசியாகும்.

யூத சமூகத்துக்கு பத்துக்கட்டளைகள் பயனளித்த முறைகளை ஆராய்வோம்.

### பத்துக்கட்டளைகளில் ஒழுக்கமான சமூகம் (விடுதலைப் பயணம் 20:1-17)

இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் வழங்கிய பத்துக்கட்டளைகளில் வாழ்வுக் கும் சமூகத்துக்கும் தேவையான சிறப்பான நற்பண்புகள் காணப்பட்டன. யூத மக்களின் சமூக நோக்கு இதனடிப்படையில் வலு வூட்டப்பட்டிருந்தது.



## பத்துக்கட்டளைகளின் பகுப்பு

| | |
|---|---|
| 1. என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. | 5. உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. |
| 2. சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்கு பணிவிடை புரியவோ வேண்டாம். | 6. கொலை செய்யாதே.<br>7. விபசாரம் செய்யாதே.<br>8. களவு செய்யாதே. |
| 3. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே. | 9. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே. |
| 4. ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப் பிடிப்பதில் கருத்தாயிரு. | 10. பிறருக்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே. |

| 1, 2, 3, 4 | 5, 6, 7, 8, 9, 10 |
|---|---|
| மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவும்<br>மனிதன் இறைவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளும் | மனித-மனித உறவின் பண்புகளும்<br>மனித உறவுகளும் |

இந்த பகுப்பாய்வின் 2 வது பகுதியின் 5 வது கட்டளை குடும்பத்தில் நிலவ வேண்டிய பெற்றோர் பிள்ளை தொடர்பை பொருளுடைய பெறுமதிமிக்க ஒன்றாகப் பிரதிபலிக்கின்றது. ஏனைய கட்டளைகள் இஸ்ரயேலரின் சமூகத்தை நல்வழிப்படுத்தின.

யூத சமூகத்தில் காணப்பட்ட அறநெறி மற்றும் நம்பிக்கை என்பன உறுதியும் பொருளுடையதும் ஆகும். நாம் உலகில் இறை உறவுடன் இறைபணிவுடன் வாழ வேண்டும். இவ்வாறான பொருளுடைய நல் வாழ்வுக்காக பத்துக்கட்டளைகள் பிரதானமாக வழிகாட்டுகின்றன. நாம் சமூகத்தில் இறை சித்தத்தை நிறைவேற்றும் இறை பிள்ளைகளாக செயற்படும்போது நாம் வாழும் சமூகம் முழுமை அடையும்.

### செயற்பாடு

01. 'ஆபிரகாமின் விசுவாசம் புதிய சமூகத்தை உருவாக்க வழிகாட்டியது' என்பதை உதாரணங்களுடன் விளக்கி சஞ்சிகைக்கு கடிதம் வரைக.

02. இஸ்ரயேல் சமூகத்தால் இன்றைய சமூகம் நற்பண்புகளால் முழுமையடைவதற்கு துணையாக அமையும் நான்கு காரணிகள் குறிப்பிடுக.

இலவச விநியோகத்திற்காக